முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2025) சென்னையில் நடைபெற்ற நினைவில் வாழும் கழக தலைமை நிலையச் செயலாளர் ஆ.த.சதாசிவம் அவர்களின் மகனும், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் துணைச் செயலாளருமான அழகிரி சதாசிவம் பெனோ செஃபின் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

“தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்”!

தமிழ்நாடெங்கும் கழகத்தினர் ஒன்றுதிரண்டு உறுதிமொழி ஏற்பு!

கழகத் தலைவர் அறிவுரையேற்று உறுதிமொழி ஏற்பு நிகழ்வு!

சென்னை, செப். 16-

திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், “ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தின் இரண்டாம் கட்டமாக, பேரறிஞர் சி.என். அண்ணா பிறந்தநாளான நேற்று (15.09.2025), தமிழ்நாட்டின் 68,000 க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் “தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்” எனும் உறுதிமொழியை ஏற்கப் பட்டது.

ஓரணியில் தமிழ்நாடு இயக்கம், மண்மொழிமானம் காக்கும் நோக்கில், ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களை இணைத்துள்ளது. இதன் முதற்கட்டம் ஜூலை 1 முதல் 70 நாட்களுக்கும் மேல் நடைபெற்று, திமுகவின் 7 லட்சம் தொண்டர்கள் மூலம் 68,000 வாக்குச்சாவடிகளில் உள்ள குடும்பங்களைச் சந்தித்தனர்.

பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான இன்று, மாநிலம் முழுவதுமுள்ள 68 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குச்சாவடிகளில் அந்தந்த வாக்குச்சாவடிக்குட்பட்ட பகுதியில் அவர்களை ஒன்றுதிரட்டி, உறுதிமொழியேற்றிட வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தியிருந்தார். இதனையடுத்து தமிழ்நாடு முழுவதும், ஒவ்வொரு வாக்குச்சாவடிக்குட்பட்ட பகுதிகளிலும் திமுகவில் இணைந்த குடும்பத்தினர் தமிழ்நாட்டை தலைகுனியவிடமாட்டோம் என உறுதிமொழியேற்றனர். தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற உறுதிமொழியேற்பு நிகழ்வுகளில் அமைச்சர்கள், மாவட்டச்செயலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், இளைஞர், இளம்பெண்கள் என திரளானோர் கலந்துகொண்டு உறுதிமொழியேற்றனர்.

குறிப்பாக, திண்டுகல் தொகுதியில் கழகத் துணைப் பொதுசெயலாளர் அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் தலைமையிலும், கன்னியாகுமரியில் கழகத் துணைப் பொதுசெயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலும், திருவண்ணாமலை தொகுதியில் அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் தலைமையிலும், திருச்சூழி தொகுதியில் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையிலும், சைதாபேட்டை தொகுதியில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையிலும், ஆவடி தொகுதியில் அமைச்சர் ஆவடி நாசர் அவர்கள் தலைமையிலும், கடலூர் தொகுதியில் அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் தலைமையிலும், சிவகங்கை திருப்பத்தூரில் அமைச்சர் பெரியகருப்பன் அவர்கள் தலைமையிலும், புதுக்கோட்டையில் அமைச்சர் ரகுபதி அவர்கள் தலைமையிலும், சேலம் தெற்கு தொகுதியில் அமைச்சர் ராஜேந்திரன் அவர்கள் தலைமையிலும், ஆலங்குடி தொகுதியில் அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் தலைமையிலும், திட்டக்குடி தொகுதியில் அமைச்சர் சி. வி. கணேசன் அவர்கள் தலைமையிலும், ஒட்டன்சத்திரம் தொகுதி அமைச்சர் சக்கரபாணி அவர்கள் தலைமையிலும், கும்பகோணம் தொகுதியில் அமைச்சர் கோ. வி. செழியன் அவர்கள் தலைமையிலும், அருப்புக்கோட்டை தொகுதியில் அமைச்சர் கே. கே. எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலும், காஞ்சிபுரம் தொகுதியில் அமைச்சர் காந்தி அவர்கள் தலைமையிலும், திருவெறும்பூர் தொகுதியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் தலைமையிலும், முதுகுளத்தூர் தொகுதியில் அமைச்சர் ராஜகண்ணப்பன் அவர்கள் தலைமையிலும், திருச்செந்தூர் தொகுதியில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர், நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக ஒன்றுகூடி உறுதிமொழி ஏற்றனர்.

இதில் நீட் விலக்கு, தொகுதி மறுவரையறை எதிர்ப்பு, வாக்காளர் பட்டியல் மோசடி, கல்வி நிதி மறுப்புக்கு எதிர்ப்பு, தமிழ்த் தொன்மை இருட்டடிப்புக்கு எதிர்ப்பு ஆகிய 5 உறுதிமொழிகளை ஏற்று “தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்” என உறுதியேற்றனர். இதே உறுதிமொழி ஏற்பு கரூர் முப்பெரும் விழாவில் (செப். 17) கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நிகழும். இதன் தொடர்ச்சியாக, செப். 2021 அன்று மாவட்ட அளவில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும்.

இந்த உறுதிமொழி நிகழ்வு, ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறை, நீட் தேர்வு, கீழடி அகழாய்வு, கல்வி நிதி பறிப்பு போன்றவற்றுக்கு எதிரான மாபெரும் மக்கள் போராட்ட இயக்கம். இது இந்திய அரசியலில் மக்கள் பங்குகொள்ளும் மாபெரும் இயக்கம் ஆகும்.

சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்

IDRMஇந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் சார்பில் கருத்தரங்கம்!

அப்துல்கலாம் ஆலோசகர் டாக்டர் பொன்ராஜ் வெள்ளைச்சாமி சிறப்புரை!

சென்னை, செப். 16 -

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் நேற்று சென்னை ஏழு கிணறு குலோப் திருமண மண்டபத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் IDRM இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் சார்பில் இரயில்வே தொழிற்சங்க தலைவரும், IDRM அறக்கட்டளை உறுப்பினர் மு.துரை பாண்டியன் தலைமையில் நடைபெற்ற "இளைஞர்களுக்கான கருத்தரங்கம்" "தமிழ்நாட்டை முதலீட்டில் வளர்ச்சி பாதையில் நடை போட வைத்தது யார் என்ற தலைப்பில் மேனாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அலோசகர்) DRM Convenor டாக்டர் பொன்ராஜ் வெள்ளைச்சாமி இன்றைய

சனநாயக அரசியலின் தமிழ் நாட்டின் பங்கை நிலையைப் பற்றி இளைஞர்களிடையே உரையாற்றினார்.

இக்கருத்தரங்கில் IDRM செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் .சு. குமார் அவர்கள் நன்றி கூறினார். இந்த கருத்தரங்கில் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

மேலும் இக்கருத்தரங்கில் பகுதி கழகச் செயலாளர்கள் எஸ் ராஜசேகர் எஸ் முரளி,P. ஸ்ரீராமுலு, எம். விஜயகுமார், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, ஜி.எம். தேவன், எம். இப்ராஹிம் கனி, சரிதா மகேஷ்குமார், வானவில் விஜய், பா.ஜெகதீஷ்பி விஜயகுமார், பா.பிரதீப் குமார் எம் விநாயகம் எல் சம்பத் குமார் சுதா தீனதயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், வெ.பரிமளம்.எம்.சி, எல். நவீன். எம்.சி, ஜனார்த்தனன், கே ஆர் அபரஞ்சி, நா சுந்தரம், எஸ் சந்தியாகு தமிழ்வாணன், வி சந்தானலட்சுமி, சீபா ஜெயராமன், வட்டக் கழக செயலாளர்கள் மா.ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், டி. சதீஷ்குமார், சேப்பாக் கம்வே.பா. பிரபாகரன், எல். சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர். எ.அஸ்லாம், த.கதிரவன், ம.பரத் குமார், க.கவியரசு, ஆ.நா பார்த்திபன் ஜி ராமமூர்த்தி பா அண்ணாதுரை மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்

2404 வாக்குச்சாவடிகளிலும் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு உறுதிமொழி ஏற்பு!

செங்கல்பட்டு நகரில் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 2404 வாக்குச்சாவடிகளிலும் நடைபெற்ற வாக்குச்சாவடிகளிலும் கழகத்தின ரும் - பொதுமக்களும் பெருந்திரளாக திரண்டு நின்று “தமிழ் நாட்டை தலை குனிய விட மாட்டோம்” என ஓரணியில் திரண்டு ஓங்கி ஒலித்து உறுதிமொழியை ஏற்றனர்.

தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காக்க, தமிழ்நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்க “ஓரணியில் தமிழ் நாடு” இயக்கத்தை கழகத் தலைவர் - மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கடந்த ஜீலை -1 அன்று துவக்கி வைத்தார்.

“ஓரணியில் தமிழ்நாடு” இயக்கம் மூலம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் தி.மு.க. வினர் வீடு வீடாகச் சென்று 9 லட்சத்து 81 ஆயிரத்து 526 பேரை உறுப்பினர்களாக சேர்த்துள்ளனர்.

3½ லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த இயக்கத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

“ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தில் 2-ம் கட்டமாக அண்ணா பிறந்தநாள் அன்று வாக்குச்சாவடி வாரியாக வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்தி ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு இழைக்கும் அநீதிகளை கண்டித்து தீர்மானங்களை நிறைவேற்றிட வேண்டும் என்று நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழ் நாடு முதல் அமைச்சர் அன்புக் கட்டளையிட்டார்.

நம்முடைய நெஞ்சம் நிறைந்த தலைவர் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று நேற்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 6 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கி உள்ள 2404 வாக்குச்சாவடிகளிலும் வாக்குச் சாவடிக் கூட்டங்கள் மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றனர்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் வார்டு - கிளைக் கழக நிர்வாகிகள், BLA-2, வாக்குச்சாவடி நிலை முகவர்கள், BDA-பூத் டிஜிடல் ஏஜெண்ட், BLC-வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் புதிதாக கழகத்தில் இணைந்தவர்களும் ஆர்வத்துடன் பெருந்திரளாக பங்கேற்றனர்.

இக்கூட்டங்களில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு இழைக்கும் நியாய மற்ற தொகுதி மறுவரையறை, வாக்குரிமையை பறிக்கும் S.I.R, நீர்தேர்வு, இந்தி திணிப்பு, கல்வி நிதியை தராமல் நிறுத்தி வைப்பு, 100 நாள் வேலைக்கு நிதி தராதது, மாநில உரிமைகளை பறிப்பது, கீழடி தொன்மையை மறுப்பது என ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு இழைக்கும் அநீதிகளை கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டங்கள் நடப்பதற்கு முன்னதாக அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அலங்கரிக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாவட்டம் முழுவதும் வாக்குச்சாவடி கூட்டங்கள் மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றது.

செங்கல்பட்டு தொகுதி செங்கல்பட்டு நகரத்தில் ராஜாஜி தெருவில் அமைத்துள்ள 380-வது பாகத்தில் நடைபெற்ற வாக்குச்சாவடிக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையேற்று உறுதிமொழியை வாசித்தார். திரண்டிருந்த கழகத்தினர் அனைவரும் உறுதிமொழியை ஏற்றனர்.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் து.மூர்த்தி, செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன் மற்றும் கழகத்தினரும் பொதுமக்களும் திரண்டு பங்கேற்று உறுதிமொழியை ஏற்றனர்.

‘ஓரணியில் தமிழ்நாடு’ திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில்

85 ஆயிரம் குடும்பங்கள் தி.மு.க.வில் இணைந்துள்ளன!

மாவட்ட கழகச் செயலாளர், திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ பேட்டி!

திருத்தணி,செப்.15:

ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் மூலம் திருத்தணி, திருவள்ளூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் 85 ஆயிரம் குடும்பங்கள் இணைந்துள்ளதாக திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.

திருத்தணியில் உள்ள திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ நேற்று செய்தியாளர்களிடம் பேசினார்.

தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைக்கும் வகையில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜூலை 1ம் தேதி ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை தொடங்கி வைத்தார். இந்தி திணிப்பு, நீட் , தொகுதி மறுவரையறை, தமிழ்நாட்டின் மண், மொழி மீது தொடர் தாக்குதல் தடுக்க ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் மூலம் திருத்தணி சட்டமன்ற தொகுதியில் உள்ள 330 வாக்கு சாவடிகளில் 2.70 லட்சம் வாக்காளர்கள் உள்ள நிலையில் ஓரணியில் தமிழகம் இயக்கம் மூலம் புதிதாக 1.29 லட்சம் வாக்காளர்கள் இணைந்துள்ளனர். திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் 296 வாக்கு சாவடிகளில் 2.73 லட்சம் வாக்காளர்களில் புதிதாக 1.17 லட்சம் வாக்காளர்கள் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டுள்ளனர். ஓரணியில் தமிழ்நாடு 2ம் கட்டம் அண்ணா பிறந்தநாளான இன்று தொடங்க உள்ளது. வாக்குச்சாவடி அளவில்

நான், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாசாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன்; தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்

. நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ் நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் SIR-க்கு எதிராக நிற்பேன்; தமிழ் நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்

. நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதிக்காகப் போராடுவேன்; ஒருபோதும் தமிழ் நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்

நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு (நன்மதிப்பிற்கு) எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்

நான் ‘பெண்கள் விவசாயிகள் மீனவர்கள் நெசவாளர்கள் உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தொழிலாளர்கள்’ என ஒவ்வொரு தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதிமொழி கூட்டங்கள் நடைபெற உள்ளது. இதன் தொடர்ச்சியாக வரும் 20.ம் தேதி மாவட்ட அளவில் ஓரணியில் தமிழ் நாடு தீர்மானக் கூட்டங்கள் நடைபெற உள்ளதாக அவர் தெரிவித்தார்.

122வது வட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு ஓரணியில் தமிழ்நாடு – வாக்குச்சாவடி அளவிலான உறுதிமொழி முன்மொழிவுக் கூட்டங்கள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம். கி. மதி எம்.சி., முன்னிலையில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், தென்மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு பங்கேற்று தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு குடும்பங்களின் 5 தீர்மானங்களை பாகம்–1, 3, 5, 7, 24, 25, 26, 41 ஆகிய பாகத்தில் உறுதி மொழி எடுத்துக்கொண்டு, கழக கொடியேற்றி, இனிப்பு வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் 122வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பிரிதிநிதிகள், மாவட்ட, பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள் , பாக உறுப்பினர்கள், பாக தகவல் தொழில் நுட்ப அணி, பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

பேரறிஞர் அண்ணா 117 வது பிறந்தநாளில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட

கொளத்தூர் கிழக்குப் பகுதியிலுள்ள 126 பாகங்களில் உறுதிமொழி ஏற்பு!

அமைச்சர்– மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, செப். 16-

கழகத்தலைவர் அவர்கள் செப்டம்பர் 15 ஆம் நாள் பேரறிஞர் அண்ணா 117 வது பிறந்தநாளில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள், பூத் கமிட்டியினர் கலந்து கொள்ளும் வாக்குச்சாவடி அளவிலான உறுதிமொழி முன்மொழிவுக் கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் 68,000 வாக்குச்சாவடிகளிலும் நடைபெற வேண்டும் என்ற அறிவுறுத்தல் படி சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 1377 பாகங்களிலும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது .அதன் ஒரு பகுதியாக கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, கொளத்தூர் கிழக்கு பகுதியில் உள்ள 126 பாகங்களிலும் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் 68 அ வட்டத்தில் உள்ள 113 வது பாகத்தில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி. மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ். பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், D.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, P.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: P.ஊமைத் துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ் குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா. அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி. தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி. மற்றும் மற்றும் கழக முன்னோடிகள் செயல் வீரர்கள் பி எல் ஏ 2,பி டி ஏ, பி ஒய் ஓ ஆகியோர் கலந்துகொண்டு உறுதிமொழி ஏற்றனர்.